**O.S.No. 98/2019**

**Date 23.07.2025**

**வா.சா.1 துர்க்கையா**

**4 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பட்டா மாற்றம் கோரி பரிகாரம் ஆகும். மேற்படி பரிகாரம் தவிர்த்து வேறு எதுவும் கோரவில்லை என்றால் சரிதான். மேற்படி பரிகாரம் கோரி யார் யார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் நியாபகம் இல்லை. வழக்கு தாக்கல்செய்ய நான் வழக்கறிஞரை பார்க்கவில்லை என்றால் சரிதான். பிராதினை நான் படித்து பார்க்கவில்லை என்றால் சரிதான். எனது முதல் விசாரணை சாட்சிய விவரங்களை படித்து பார்த்து கையொப்பம் செய்யவில்லை என்றாலும் அதில் உள்ள விவரங்களை நான் கூறவில்லை என்றாலும் சரிதான்.

**நீதிமன்ற கேள்வி: நிரூபண உறுதி கூற்றில் உள்ள கையெழுத்து உங்களுடையதா என்றால் என்னுடைய கையெழுத்து இல்லை. (சாட்சி நிரூபண உறுதி கூற்றினை நன்றாக பார்த்துவிட்டு பதில்கூறினார்.)**

சொத்தை அனுபவித்து வருகிறேன் எந்தெந்த சர்வே எண் என்று எனக்கு தெரியாது. எனது ஊரில் லட்சுமியாபுரத்தை சார்ந்த குருசாமி நாயக்கர் மகன் சீனிராஜ் மற்றும் செந்தில் குமார் ஆகியோர்கள் சுமார் 30 ஆண்டுகாலமாக தீப்பெட்டி ஆபிஸ் தொழிற்சாலை கட்டி தொழில் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். மேற்படி சீனிராஜ்க்கு நான் சொத்து எதுவும் விற்பனை செய்தேனா என்றால் இல்லை. எனது பிராதில் குருசாமி நாயக்கர்மகன் சீனிராஜ் என்பவருக்கு சொத்து எதுவும் விற்றதாக எதுவும் கூறவில்லை. நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். தாவா சொத்திற்கான நான்கு மால்விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எனது தரப்பில் என்ன முன் உரிமை ஆவணங்கள் போன்ற ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தீர்வை ரசீதுகளை தான் கொடுத்துள்ளேள், தீர்வை ரசீதுகளை தவிர்த்து வேறு ஆவணங்கள் இல்லை. எனது தகப்பனார் பெயர் துக்கையா நாயக்கர் ஆகும். எனது தகப்பனார் நான் மட்டும் தான் வாரிசு. எனது தகப்பனாரின் தகப்பனார் பெயர் துக்கையா நாயக்கர் ஆகும். எனது தாத்தா, எனது தகப்பனார் பெயர், எனது பெயரை காண்பிப்பதற்கு வேறு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

எனது பெயரையும் எனது முன்னோர்களது பெயரை அடையாளப்படுத்தி காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்களுக்கு வில்லங்க சான்றினையும் வில்லங்க ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் பெயர் துக்கையா நாயக்கர் என்றால் சரிதான். எனது தகப்பனார் பெயர் துர்க்கையா நாயக்கர் கிடையாது என்றால் சரிதான். சாமிநாயக்கர் மகன் துர்க்கையா நாயக்கர் என்பது நான் இல்லை என்றால் சரிதான். துர்க்கையா மகன் கிருஷ்ணசாமி என்று உடன்பிறந்தவர் யாரும் எனக்கு கிடையாது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா–ஆ. 4 மற்றும் 6 ல் மேற்சொன்ன சாமிநாயக்கர் மகன் துர்க்கையா நாயக்கர், துக்கையா நாயக்கர் மகன் கிருஷ்ணசாமி–1, துக்கையா நாயக்கர் –2 என குறிப்பிடப்பட்டிருந்தால் அது என்னுடைய ஆவணம் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ–7 தீர்வை ரசீதுகள் வா.சா–ஆ.4 மற்றும் 6 யை பொறுத்து ஏற்பட்ட வருவாய் தீர்வை ரசீதுகள் அல்ல என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்தவற்கு முன்பு வருவாய் துறையினரிடம் பட்டா மாற்றம் கோரி மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 13.05.1993 ல் 4 ம் பிரதிவாதியின் சகோதரர் குருசாமி நாயக்கர் மகன் சீனிராஜ்க்கு கிரையம் எழுதிகொடுத்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஆவணத்தில் புல எண். 806/5 ஏ ல் 14 செண்ட் கிரையம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி புல எண். 806/5 ஏ சொத்தை மேற்படி சீனிராஜ் கிரையத்தின் படி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஆவணம் 13.05.1993 ல் எழுதி கொடுத்தது என்றால் சரிதான். தேதி சரியாக எனக்கு நினைவில்லை. நான் கிரையம் கொடுத்த இடத்தில் தான் குருசாமி நாயக்கர் மகன் சீனிராஜ் தீப்பெட்டி தொழிற்சாலை கட்டி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். 4 ம் பிரதிவாதியை பொறுத்து வீண் வம்பு வழக்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கில் உள்ள இதர சொத்துக்கள் பிற 3 ம் நபர்களுக்கு பாத்தியப்பட்டது என்றாலும் நான் தவறாக உரிமை மூலம் கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எனக்கு முன் உரிமை மூலம் சரியாக இல்லாத காரணத்தினால் தான் நான் முன் உரிமை மூல ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு இவ்வழக்கை தாக்கல் செய்ய யாதொரு வியாஜ்ஜிய மூலமும் இல்லை என்றால் சரியல்ல.

எனது பட்டா மாறுதலுக்கான நடவடிக்கைகள் வருவாய்துறையினரால் உரிய முறையில் விசாரணை செய்து, எனது மனுக்களில் தீர்வு காணப்பட்டு, அது முடிவுக்கு கொண்டு வரப்பட்டது என்றால் சரியல்ல. வருவாய் துறையினர் விசாரித்து பட்டாவில் கண்ட நபர்களுக்கும் எனக்கும் தொடர்பு உரிமை இல்லை என கூறி நிராகரித்து விட்டனர் என்றால் சரிதான். எனது வழக்கு நீதிமன்றத்தில் பரிகாரம் தேடி முதிர்வற்ற வழக்கு என்றால் சரியல்ல. வருவாய் துறையில் மேல்முறையீடு பரிகாரம் எதுவும் முழுமையாக பயன்படுத்தி செயல்படுத்தாமல் இவ்வழக்கை நேரடியாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிராது 4ம் அயிட்ட சொத்தை பொறுத்து நான் தற்போது உரிமையாளராகவும், உடைமையிலும் இல்லாத காரணத்தினால் நான் கோரும் விளம்புகை பரிகாரம் ஏவுகட்டளை பரிகாரமும் கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

**1 முதல்3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தீர்வை ரசீதுகளை செலுத்தியுள்ளேன். மூல ஆவணங்களை நான் தாக்கல்செய்யவில்லை. தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது கிடையாது என்பதால் தான் மூல ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பட்டா கோரி வருவாய் துறையினரிடம் மனுவின் மீது வருவாய் கோட்டாட்சியரிடம் மேல்முறையீடு எதுவும் செய்தேனா என்றால் இல்லை. 1 முதல் 3 பிரதிவாதிகள் மீது கோரியுள்ள பரிகாரம் எதுவும் செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் கோரும் பரிகாரம் உரிமையியல் நீதிமன்றத்தில் முடிவு செய்ய இயலாது என்றால் சரியல்ல. எனது வழக்கு நீதிமன்றத்தில் பரிகாரம் தேடி முதிர்வற்ற வழக்கு என்றால் சரியல்ல. எனது வழக்கினை 1 முதல் 3 பிரதிவாதிகளை பொறுத்து தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

ம.வி இல்லை.